புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

# நாகம்மாள் நாவலின் கதைப்போக்கில் பெண்ணிய ஆளுமையும் சிதைவும்

**ஆய்வாளர்**
**அ. நர்மதா,**
*(பதிவுஎண்.05029/Ph.D.K6/Tamil(FullTime)*
*பாரதிதாசன்பல்கலைக்கழகம் அங்கிகாரம் முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, துவாக்குடி, திருச்சி.*

**நெறியாளர்**
**முனைவர் பெ. பகவத்கீதா,**
ஆய்வு நெறியாளர்,
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
அரசு கலைக்கல்லூரி,
துவாக்குடி, திருச்சி.

**ஆய்வுச் சுருக்கம்**

ஆர். ஷண்முக சுந்தரத்தின் நாகம்மாள் என்னும் குறுநாவலில் பெண்ணிய ஆளுமையானது சிறந்ததாகக் காணப்படுகின்றது. கருவிலிருக்கும் போதே பெண் குழந்தைகளுக்குப் பிரச்சினையானது ஆரம்பமாகி விடுகின்றது. குடும்பத்தில், பணியிடத்தில் பொதுவெளியில் பெண்ணுக்கானப் பிரச்சினைகள் மற்றும் சிக்கல்கள் அதிகம் காணப்படுகின்றன. அதனை எதிர்த்துப் போராடக்கூடிய துணிவினைப் பெற்றவளாகப் பெண் படைக்கப்படுமிடத்து அவள் புரட்சியும் எழுச்சியுமிக்கப் புதியதொரு புதுமைப் பெண்ணாக வடிவெடுக்கிறாள். தந்தை வழி மரபினை உடைய நமது தமிழ்ச் சமுதாயத்தில் பண்டைய

காலத்தில் இருந்து மூளை சலவை செய்யப்பட்டு அடிமைகளாக மாற்றப்பட்டு விழிப்புணர்வு அற்றவர்களாகவே வாழ்ந்துள்ளனர். கற்பு என்னும் போர்வையைப் போர்த்திவிட்டு கொடுமையான மதபோதனைகள், சட்டங்கள், மிருகத்தனமான வெறிச்செயல்களுக்குப் பெண்களை அடிமையாக்கி, ஆணாதிக்கத்தை சமூக அடையாளமாக்கிவிட்ட மனித வாழ்வியலில் நாகம்மாள் என்ற பெண்ணானவள் துணிச்சலும் வீரமும் மிக்கவளாக ஆர்.ஷண்முக சுந்தரத்தால் குறுநாவலில் காட்டப்படுகின்றாள். அந்நாகம்மாளின் பெண்ணியத்திறனை, ஆளுமையின் வெளிப்பாட்டை, பெண்மையின் அவலம், முடிவுகளின் நன்மை தீமைகள் ஆகியவற்றை சமூகவியல் நோக்கில் எடுத்துரைப்பது .

**குறிப்புச் சொற்கள்**

இட்டேறி, கிளுவமரம், வட்டச்சோறு, வங்கி பறித்து, ஷூண்தசை ?, உச்சி, அமிர்தக் கலசம், தென்னந்தடுக்கு, கற்பூரம், ஊகித்தல்

**முன்னுரை**

தமிழ் இலக்கியத்தின் மிக நீண்டதொரு இலக்கிய வரலாற்றில் சிறந்ததொரு வளர்ந்துவரும் இலக்கிய வடிவம் குறுநாவல் வடிவமாகும். இதனை குறும்புதினம் என்றும் வழங்குகின்றனர். 19ஆம் நூற்றாண்டிற்குப் பின்பு குறும்புதின வடிவங்கள் அதிகம் வளர்ந்துவரும் இலக்கிய கலை வளர்ச்சியாகக் காணப்படுகின்றன. அத்தகைய வளர்ச்சி மிக்க இலக்கிய வளர்ச்சியில் ஆர். ஷண்முக சுந்தரத்தின் நாகம்மாள் நாவலானது பெண்மையின் மனப்போராட்டங்களைச் சித்தரிப்பதுடன், பெண்மையின் மன ஆளுமையையும், பெண்ணினத்திற்கான மாறுபட்ட சிந்தனை வளர்ச்சியையும், பெண்களின் கைகள் தொட்டிலை ஆட்டுவதற்கு மட்டுமல்ல தொல்லுலகை ஆள்வதற்கும் தானே என்ற சிந்தனை வளர்ச்சியை வெளிப்படுத்தக் கூடியதாகப் படைக்கப்பட்டுள்ளது அந்நாகம்மாளின் பெண்ணிய பண்பு நலன்களை ஆராய்ந்துரைப்பதன் மூலம் பெண்களின் ஆளுமைத்திறன் எதனைச் சார்ந்தது என்று அறுதியிட இயலும்.

**ஆய்வு அணுகுமுறை**

வட்டார வழக்குச் சொற்களை ஆர். ஷண்முக சுந்தரம் நாகம்மாள் குறுநாவலில் அதிகம் பயன்படுத்தியுள்ளதுடன் கதைக்களமான ஊட்டியைச் சார்ந்த மலைப்பகுதிகளைக் கொண்டு அமைந்துள்ளது. அதனால் கதையின் கருவிற்கும் களத்திற்கும் ஏற்ப, பெண்ணிய சமூகவியல் ஆய்வு அணுகுமுறையும், கருத்துக்களை நிரல்பட பகுத்தும், தொகுத்தும், விளக்கியும் சொல்வதனால் பகுப்புமுறை மற்றும் தொகுப்பு முறை, விளக்கமுறை அணுகு முறையும் இவ்வாய்வுக் கட்டுரையில் பின்பற்றப்பட்டுள்ளது.

**கதை மாந்தர்கள்**

*குறு நாவல்கள் கதை மாந்தர்களின் நிலைப்பாட்டை கதையின் தன்மைக்கு ஏற்ப வெளிப்படுத்தக் கூடியன .. நாகம்மாள் குறுநாவலின் முதன்மை கதை மாந்தராகப் பெண் காணப்படுகின்றாள். எழுத்துலகத்தில் பெண்ணியம் பற்றிய மதிப்புடைய சிந்தனையும், தார்மீகச் சிந்தனையும் பொறுப்புடன் கூடிய தலைமைத்துவம் மிக்கவர்களாகக் காட்டப்படுவதற்கு இத்தலைமைத்துவ கதை மாந்தரான நாகம்மாள் எடுத்துக்காட்டாகப் படைக்கப்பட்டுள்ளார்.*

*1. நாகம்மாள் - முதன்மை கதை மாந்தர்*
*2. முத்தாயார் - நாகம்மாளின் பெண்*
*3. சின்னப்பன் - நாகம்மாளின் கொழுந்தன்*
*4. ராமாயி - சின்னய்யனின் மனைவி*
*5. ஊர்க்காரர்கள் - பண்டாரத்தார்கள்*
*உள்ளூர் நாடார்கள்*
*தோட்டிகள்*
*தலையாரிகள்*
*மணியக்காரர்*
*கடைக்காரர்கள்*
*6. பெரியவர் - ஊர்ப்பண்ணாடியன் தகப்பனார்*
*7. கெட்டியப்பன் - எதிர்முகக் கதைமாந்தர்*
*8. ஊர்ப்பண்ணாடி*
*9. திவாட்டிக்காரன்*
*10. பறைமேளம் அடிப்பவர்கள்*
*11. சின்னப்பனின் அண்ணன் (நகம்மாளின் கணவன்)*
*12. ராமாயின் தாய்*
*13. ராமாயின் தம்பி*
*14. சைங்காளி (கெட்டியப்பனின் நண்பன்)*
*15. செல்லாக்காள்*
*16. செல்லக்காளின் மகள்*
*17. மூன்று குடிகாரர்கள்*
*18. முதலியார்*
*19. கவுண்டர்*
*20. காளியம்மாள்*

**நாகம்மாளின் ஆளுமையும் கதைப் போக்கும் :**

சின்னப்பனின் அண்ணன் மனைவி நாகம்மாள் ஆணுக்கு நிகராக நின்று வயல்வெளிகளில் உழைக்கக் கூடிய கதையின் தலைமை மாந்தராக படைக்கப்பட்டுள்ளாள். பிற துணைமை பாத்திரங்களாக வரக்கூடிய அனைத்து கதை மாந்தர்களுடைய செயல்பாடுகளும் நாகம்மாள் என்ற முதன்மை பாத்திரத்தை வைத்து கதையில் நகர்ந்து செல்கின்றன.

*'வெண்கலத் தொனியில் ஒரு பெண் பேசுவது கேட்கிறதே! அது யாரது? அந்த புடவைக் கட்டிலிருந்தும் பாய்ச்சல் நடையிலிருந்தும் அவள் நாகம்மாளாகத்தான் இருக்க வேண்டுமென்று ஊகித்துக் கொண்டிருப்பீர்கள். ஆமாம் நாகம்மாள் தான் சுளிக்கும் மின்னல் போல் அங்குமிங்கும் திரிந்து கொண்டிருக்கிறாள்'' (ஆர். ஷண்முக சுந்தரம், 2013)*

என்று நாவலின் மொத்த கதைப்போக்கும் நாகம்மாளை மையமிட்டு அமைந்துள்ளன. குறுநாவல் கதைக் களத்தில் பெண்ணின் உணர்வுகளைப் புரிந்துக் கொண்டு கிராமத்தில் வாழும் நாகம்மாளை கதையின் நாயகியாக்கி, நிகழ்வுகள் அனைத்தையும் காரண-காரியத்தின் அடிப்படையில் விளக்கம் தந்து, குறு நாவலின் முழு வடிவமும் சிதையுறாமல் எடுத்துரைத்துள்ள விதம் சிறந்த கதைப்போக்கினை உடையது என்பதைக் காட்டுகின்றது.

கதைப்போக்கில் கதைப்பின்னலானது அனைவருக்கும் ஏற்றதொரு முறைமையில் அமைக்கப்பட்டால் கதையினைப் படிக்கும் ஆர்வமானது வாசகர்கள் மத்தியில் ஏற்படும். அத்தகைய ஆர்வத்தினை நாகம்மாள் என்னும் குறும்புதினம் ஏற்படுத்துகின்றது.

*'தனி மனிதனானவன் தன்னுடைய சமூக அமைப்பினோடு ஒத்து இயங்குகின்ற காலங்களின் போதும், முரண்பட்டு இயங்குகின்ற காலங்களின் போதும் அவனுக்கு ஏற்படுகின்ற அனுபவங்களின் விளைவானது ஒரு நாவலுக்குத் தேவையான சிறந்த கதைப்பின்னலாக அமைகின்றது'' (வைஜெயந்தி மாலா, 2006)*

என்ற கூற்று கதைப்பின்னலின் தன்மையைத் தெளிவாக எடுத்துரைக்கின்றது.. நாகம்மாள் என்ற தனிமனித பெண்மணி குடும்பத்தோடும், சமூகத்தோடும் ஒத்தும் முரண்பட்டும் இயங்குகின்றதையும், சில இடங்களில் யாரையும் சார்ந்து இயங்காமல், ஆளுமை மிக்கப் பெண்ணாக செயல்படுவதையும், கட்டுக்கடங்காமல் முடிவெடுப்பதையும், ஆண்களின் நயவஞ்சகத்தையும், ஆனால் ஆணினம் பாதிக்கப்படுவதையும், அதனை எதிர்த்துப் போராடுகின்ற பெண்ணிய செயற்பாடுகளையும் பாத்திரங்களின் வாயிலாகவும், துணைமை பாத்திரங்களின் வழியாகவும் விறுவிறுப்பான கதைப்பின்னலின் மூலம் ஆர். ஷண்முக சுந்தரம் வெளிப்படுத்தியுள்ளார்.

**படைப்பும் நோக்கமும் நாகம்மாளும் :**

மனிதர்களின் சமமான அங்கீகாரம் பெற்ற வாழ்வியலை எடுத்துரைப்பது சமமாகிய ஆயத்தினர் என்ற சமுதாயமாகும். சமுதாயத்தின் பொதுமை சமம் என்பதாகும். ஆனால்

சமுதாயத்தில் சமம் என்பது மட்டும் கிடையாது. உயர்ந்தவன் - தாழ்ந்தவன் - என்ற பாகுபாடு உண்டு. அனைவரும் சமம் - என்பது கிடையாது முதலாளி - தொழிலாளி - என்ற வேறுபாடு உண்டு. இருவரும் ஒன்று தான் என்ற சமன்பாடு கிடையாது. மனிதர்கள் கூடி வாழ வேண்டும் என்ற தலையாய நோக்கத்தை இலக்கியங்கள் முன்வைக்கின்றன. ஆனால் வாழ்வியலில் அவை கிடையாது ஒரு மனிதன் தான் வாழும் சமூகத்தைக் கூர்ந்து கவனிக்குமிடத்து அவன் படைப்பாளியாக தோற்றம் பெறுகின்றான்.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள கீரனூர் என்னும் கிராமத்தில் பிறந்தவர் தான் மணிக்கொடி. எழுத்தாளரான ஆர். ஷண்முக சுந்தரம் *(1917-71)* அவர்கள் மணிக்கொடி எழுத்தாளர்களிலே முதன்முதலில் நாவல் இலக்கியம் எழுதியவர் என்ற பெருமைக்குரியவர். *1942*ஆம் ஆண்டுதனில் நாகம்மாள் நாவலானது எழுதப்பட்டது.

> **'கிராம மக்களின் விரிவையும், மேன்மையையும், தூய்மையையும் படம் பிடிக்கும் வகையில் முதல் நாவலான நாகம்மாள் எழுதப்பட்டுள்ளது" *(ஆர்.ஷண்முக சுந்தரம், 1942)*** என்கிறார் கு.பரா.

அழகிய கிராமத்து மண்வாசனை மற்றும் பண்பாட்டு விழுமியங்களைத் தாங்கி நிற்பதாக நாகம்மாள் நாவல் படைக்கப்பட்டுள்ளது.

> ***'நாகம்மாள் என்னும் பாத்திரத்தை மையமாகக் கொண்ட இந்நாவல், பெண்ணை சுயசிந்தனையும் செயல்பாடும் உடையவளாகப் படைத்துள்ள விதத்திலும், சிந்தனையிலும் முதன்மை தன்மை வாய்ந்தது. தமிழின் தொடக்க நாவல்கள் அனைத்தும் பெண்களையும் அவர்கள் பிரச்சினைகளையும் பற்றியவை. ஆனால் அவற்றில் வரும் பெண்களுக்கு சுயமுகம் எதுவுமில்லை. ஆண்கள் பரிதாபப்பட்டு வழங்கும் அடையாளங்களைத் தரித்தவர்களாகவே உள்ளனர். நாகம்மாளை அவ்வரிசைதனில் சேர்க்க முடியாது. தன் சுதந்திரத்திற்காகவும், எதிர்காலத்திற்காகவும் தன் சக்திக்காகவும் உட்பட்டு கலகத்தைத் தோற்றுவிக்கும் இயல்புடையவளாக நாகம்மாள் விளங்குகின்றார்" (பெருமாள் முருகன், 2013)***

என்கிறார். நாகம்மாளைக் கட்டுப்படுத்தக்கூடிய சமூக சூழலியல் காரணிகள் பலமாகக் காணப்பட்டவிடத்தும், அவள் யாருக்கும் அடங்காமல் சமூகம் வரையறுத்திருந்த பெண்ணிய மதிப்பீடுகளை எல்லாம் உடைத்தெறிந்தவகாகக் காணப்படுகின்றாள்.

> ***'உலகில் மனித வர்க்கத்தினருக்குள் இருக்கும் அடிமைத்தன்மை ஒழிய வேண்டும். ஆனால் பெண்ணுலகை அடிமையாகக் கருதி நடத்தும் அகம்பாவமும் கொடுமையும் அழிய வேண்டும். அது அழிந்த நிலையே சமத்துவம், சுதந்திரம் என்னும் முளை முளைக்கும் இடமாகும். இதற்கு விதவைகளுக்கு மறுமணம் செய்து கொள்ள உரிமை ஏற்படுத்துவதே முதல் காரியமாகும்" (தந்தை பெரியார், 1933)***

*என்ற பெரியாரிய பகுத்திறிவுச் சிந்தனையை தமது நாவலின் மூலம் 1924ஆம் ஆண்டுதனில் சிறப்புற வெளிப்படுத்தியுள்ளார் ஆர். ஷண்முகசுந்தரம்.*

***பெண்ணிய ஆளுமையும் சிதைவும் :***

*'பெண்ணில் பெருத்தக்க யாவுள ' என்ற வள்ளுவனின் வரிகளுக்கிணங்க சிறப்புடைய இனம் பெண்ணினமாகும். அத்தகைய பெண்ணினத்தில் - ஊட்டி மலைப் பகுதியான சிவியார் பாளையத்தைச் சேர்ந்தவளாக நாகம்மாள் என்னும் பெண் காட்டப்படுகின்றாள். பெண்களின் இயல்பு என்று வரையறுக்கப்பட்ட அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எதுவுமற்ற கட்டற்றவளாகப் படைக்கபட்டுள்ளாள். நாவல் முழுவதும் அவருடைய ஆளுமை மட்டுமே விரவிக் கிடக்கின்றது.*

> ***'கணவன் இறப்பதற்குப் பத்து வருஷத்திற்கு முன்பிறந்தே அவள் ஒரு ராணி போலவே நடந்து வந்திருக்கிறாள் என்றும் பிறருக்கு அடங்கி நடக்கும் பணிவும் பயமும் என்னவென்று அறியாதவள்" (ஆர். ஷண்முக சுந்தரம், 2013)***

*என்று குறிப்பிடுகின்றார். தனக்குத் தோன்றியதை செய்திடும் சுதந்திரமிக்கவளாகவும் நெஞ்சுரம் படைத்தவளாகவும் காணப்படுவதைப் பார்க்க முடிகின்றது.*

> ***'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் நிமிர்ந்த ஞானச் செருக்கும்" (பாரதியார், 1904)***

*என்ற பெண்மைக்கானப் புதிய இலக்கணத்தை வகுத்திட்டவர் பாரதியார். அக்கூற்றினை மெய்ப்பிக்கும் வகையில் தனக்கான அடையாளதை மாற்றியமைத்து மற்ற ஆண்களும், பெண்களும் பயப்படுகின்ற அளவுக்கு அதிகாரத் தோரணை மிக்கவளாக நாவல் முழுவதும் நாகம்மாள் வலம் வருகின்றாள்.*

*அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பது அற்று, அச்சம், ஞானம், திடம், உயிர்ப்பு என்பதை அடையாளமாகக் கொண்ட நாகம்மாளின் கூடாத நட்பு இறுதியில் கேடாய் முடிவதுடன் சின்னப்பன் ஆகிய தனது கொழுந்தனாரின் மரணத்துக்குக் காரணமாக அமைவது உண்மை சம்பவம் என்பதைக் காட்டுவதுடன் பெண்ணியத்தின் தீவிர செயல்பாட்டின் விளைவு, மாறுபட்ட முரண்பாட்டினை உருவாக்கக் கூடியதாக அமைவதையும் காட்டுகின்றது.*

> ***'நாகம்மாள் இரண்டொரு தடவை சண்டை சச்சரவு இல்லாமல் அவர்களோடு ஒத்துப் போய்விட்டால் என்ன? - என்று யோசிப்பாள். ஆனால் அங்கே போய் பிச்சைக்காரியைப் போல நீ போடு ஐயா நான் திங்கிறேன் - என்று காத்துக் கொண்டிருப்பதா? இந்த ஜன்மத்திலேயில்லை என்று திடம் செய்து கொண்டாள்" (ஆர். ஷண்முக சுந்தரம், 2013)***

*யாரிடமும் ஒரு வேளை உணவுக்காகக் கூட கையேந்தி வாழ்தல் கூடாது. தன்னுடைய உடல் உழைப்பினால் சுயமாக சம்பாதித்து சாப்பிட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தாள்*

நாகம்மாள். தனக்காகவும் தன் எதிர்காலத்திற்காகவும் குழந்தை முத்தாயாவின் சொத்தினை சமபங்காக பிரிந்திடல் வேண்டும். தன் கணவன் இறந்தும் கூட அவனுடைய சொத்தினையும் சேர்த்து விவசாயம் பார்க்கும் சின்னப்பனிடம் இருந்து தனியே பிரிந்து வெளியே வர வேண்டும் என்று எண்ணுகின்றாள்.

*'ஆண்கள் கட்டமைத்துக் கையகப்படுத்தித் தந்த பற்றாக்குறை வார்த்தைகளானவை பெண் அகராதியைப் பெருமளவில் பீடித்திருக்கின்றது. பெண் சார்பு வார்த்தைகளானப் பெரும்பாலும் குணம் சார்ந்ததும் குடும்பம் சார்ந்ததும் அமைக்கப்பட்டிருகின்ற அறிவும் ஆற்றலுமான பெண் சார்ந்த உயர்தர வார்த்தைகளான சில வார்த்தைகள் கட்டமைக்கப்பட்டிருப்பது அதிசயமானதாகும். பத்தினி, வைப்பாட்டி, தாசி, வேசி, சின்ன வீடு, முதிர்க்கன்னி, மலடி, விதவை, ஓடுகாலி, வாழாவெட்டி, தாலி அறுத்தவள், சுமங்கலி, கற்புக்கரசி போன்றவை ஆண் அதிகாரத்தின் வெளிப்பாடாகும். ஏராளமானவை தமிழில் உண்டு" (வைஜெயந்தி மாலா, 2006)* என்கிறார்.

அவசரமும் தேவையும் ஆணாதிக்கமும் கலந்திட்ட இச்சமூகத்தில் பெண் பற்றிய பொய்மை வேதம் பரவலாக்கப்பட்டு அடி ஆழம் வரைச் சென்று வேர்விட்டு விட்டது. அத்தகைய வேரினை களைத்தெறிகிறாள் நாகம்மாள்.

*'நான் ஏன் இங்கு வந்து சேர்ந்தேன். நல்ல மரத்தில் கரையான் விழுந்தது போன்று பெரிய குடும்பத்துக்கே அவக்கேடாக வந்து சேர்ந்தேனா? தலைமுறை தலைமுறையாய் ஐக்கியமாய் வாழ்ந்திருப்பவர்களுக்குக் கெட்டப் பெயர் உண்டுபண்ணப் பார்க்கிறேனா? என்றெல்லாம் எண்ணுவாள். பங்கு பிரிக்க வேண்டும் என்று குடும்பத்தைப் பாழ்படுத்த எண்ணுகிறேனா? என்ற நினைவுகளுக்கு அவளே முடிவினைத் தந்து கொள்வாள்.*

*கட்டறுத்துக் கொண்டு பத்து நாள் இருந்தாலும், அதுவே அடிமையாக பத்தாயிரம் வருஷம் இருப்பதை விட மேலானது அல்லவா? எனக்கென்று தனியாக எல்லாம் வேண்டும் என்றும் நான் நினைத்தால் எதையும் செய்ய வேண்டும்" (ஆர். ஷண்முக சுந்தரம், 2013)*

என்று எண்ணிக்கொண்டு தன் போக்கிற்கு வாழ்வதுடன் சொத்தினைப் பங்கு பிரிப்பதற்காகச் சென்று கெட்டியப்பன் என்ற குடிகாரனிடம் மணியக்காரர், கவுண்டர், முதலியார் போன்ற ஊர்க்காரர்களிடமும் நட்பு பாராட்டி, சமைத்து உணவு பரிமாறுகிறாள்.

*'அவசரப்படுவது என்பது அறிவீனம் மட்டுமல்ல. அது ஒரு வகையான பலவீனமும் கூட ஆகும். அதனால் தான் மேலை நாட்டு அறிஞர் கோல்டன் அவசரம் பலவீனங்களின் அடையாளம்" (அப்துற் றஹீம், 2005)*

என்றதொரு அவசரப்பட்ட பலவீனத்தை நாகம்மாளின் செயற்பாட்டினில் காணமுடிகின்றது. மேலும்,

> ***'செயல் வெற்றிக்கு உற்சாகம் அவசியம் தான். ஆனால் அது அளவை மீறிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அளவை மீறும் போது அமுதும் நஞ்சாகி விடுகிறது' (அப்துற் றஹீம், 2005)***

என்ற அப்துற் றஹீமின் கூற்றுப்படி உற்சாகமிக்க செயலை உடைய பெண்ணான நாகம்மாள் கூட்டுக் குடும்ப வாழ்க்கையை வெறுத்து, தனிக் குடும்ப வாழ்க்கையை விரும்புவதும், சுதந்திரத்தின் அதீத வேட்கையானது அளவு மீறிச் செல்வதையும் பார்க்க முடிகின்றது.

சமுதாயத்தில் குடும்பத் தலைவன் இறக்குமிடத்து, குடும்பச் சுமையானது குடும்பத் தலைவியின் மீது விழும். ஆனால் நாகம்மாள் கதையில் அண்ணனின் குடும்பத்தை தாங்கி பிடிப்பவனாக, குடும்பச் சுமை அனைத்தையும் ஏற்றுக் கொள்பவனாக சின்னப்பன் காணப்படுகின்றான். சின்னப்பனின் மனைவி ராமாயி எதார்த்தம் நிறைந்த அப்பழுக்கற்ற, ஒழுக்கம் நிறைந்த பெண் ஆவாள். யாரையும் எதிர்த்தும் அதிர்ந்தும் பேசிடாத அன்பு உள்ளத்தினள் ஆவாள்.

> ***'நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்***
> ***அல்லது செய்தல் ஓம்புமின்" (கு.வெ.பா. உரை, 2005)***

என்ற புறநானூற்று வரிகளுக்கு ஏற்ப தான் வாழும் சூழலைக் கருத்தில் கொண்டு, தீமை ஏதும் செய்திடாத சிறப்புமிக்கப் பாத்திரப்படைப்பு ஆகும். நாகம்மாளின் அதட்டல் பேச்சு , அதிகாரப் பேச்சு, ஆணவச் செயல்பாடு என்றனைத்தையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டு அன்பினை மட்டுமே பரிசாகத் தரக் கூடிய சிறந்ததொரு கதை மாந்தர் ராமாயி ஆவாள். ராமாயின் கணவன் சின்னப்பன்,

> ***'சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனால்***
> ***உழந்தும் உழவே தலை" (ஆச்சார்யா (உ.ஆ.), 2006)***

என்ற வள்ளுவனாரின் வாய்மொழிக்கு இணங்க உழவுத் தொழிலின் திண்மையறிந்து தான் இறக்கும் வரை வயல்வெளிகளில் உழைப்பதை மட்டுமே செய்து சின்னப்பன் உழவுத்தொழில் செய்த வயலிலே, நாகம்மாளின் நண்பன் கெட்டியப்பனின் அடியாளான செங்காளி என்பவனால் கொலை செய்யப்படுகின்றான். தமது வாழ்நாள் முழுவதையும் குடும்பத்திற்காகவும், உழவுத் தொழிலுக்காகவும் உழைத்தவன். சின்னப்பன் என்ற கதை மாந்தர் ஆவான்.. சின்னப்பனின் முடிவெடுக்கும் திறனை நோக்கி கதையின் நகர்வு அமைகின்றது.

இல்லறத்தின் அடிப்படை அன்பு காட்டுவதாகும். அத்தகைய அன்புடையவர்களாக ராமாயி - சின்னப்பன் கதையில் வருகின்றனர். தன்னுடைய குழந்தை, மூத்தாருடைய குழந்தை என்று எவ்வித வேறுபாடின்றி அண்ணன் - தம்பி இருவரின் குழந்தைகளையும் வளர்த்தெடுக்கின்றாள் ராமாயி.

*'அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்*

*புல்லார் புரள விடல்" (ஆச்சார்யா உரை, 2006)*

என்ற வள்ளுவரின் வாய்மொழியைப் பின்பற்றுபவர்களாக இவ்விரு கதை மாந்தர்களும் படைக்கப்பட்டுள்ளனர். அருள் தன்மை உடைய உள்ளத்தினை அன்புக் காட்டுவதில் பாகுபாடு அற்றும் காணப்படுகின்றனர். அவ்விருவரைப் பற்றியும் நாகம்மாள் அடிக்கடி நினைத்துப் பார்க்கின்றாள். கணவன். இறந்துவிட்ட போது, தனது உறவுக்காரனாகப் பாசமிகுத் தம்பியாக நின்று அனைத்துக் கடமைகளையும் செய்து வந்தான் சின்னப்பன் தான் என்று நினைக்கின்றார். ஆனால், அதற்க்கான நன்றியையும், விசுவாசத்தையும் சொத்து என்னும் பேராசையானது ஆக்ரமித்து விட, பேராசையின் பிடியில் சிக்கிய நாகம்மாள் நொடிப்பொழுதில் அனைத்தையும் மறந்துவிட்டு, பின்னர் அவர்களுடன் போரிடத் தொடங்குகின்றாள்.

> ***'மணியக்காரர் வீட்டில் ஆலோசித்ததைப் போன்று நாகம்மாள் விடியற்காலையில் போரைத் தொடுத்துவிட்டார். தோட்டத்தில் வேலை செய்ய, ஏற்றும்பிடிக்க வந்த சின்னப்பனைத் தடுத்தும் விட்டாள். தொல்லை ஆரம்பமாகி விட்டது" (ஆர். ஷண்முக சுந்தரம், 2013)***

எனக்கான சொத்தினைப் பிரித்து தரவேண்டும் என்ற போராட்டத்தினை தொடங்கிய நாகம்மாள், தனது கருத்தினைப் பின்வாங்காமல், வேலையைத் தடுத்து நிறுத்துவதிலே குறிக்கோளாக இருந்தாள். அப்பொழுதில் தான் கதையில் மிகப்பெரிய எதிர்பாராத திருப்பமானது ஏற்படுகின்றது.

> ***'கெட்டியப்பன் தன் கைத்தட்டியால் மடாலென்று ஓங்கிச் சின்னப்பன் தலையில் அடித்துவிட்டான். அந்த அடியில் அந்த அடியின் வேகத்தால் தடிகூடச் சின்னாபின்னமாகி முறிந்துவிட்டது. சின்னப்பன் நிலை கொள்ளாது பூமியில் மளமளவென்று பெருகியது. சித்திரை வெயிலில் சோரும் வாழைக் குருத்தைப் போன்று அங்கங்கள் சுருங்கி, சுவாசம் பலமாகி பின் மெதுமெதுவாக அடங்கிற்று" (ஆர். ஷண்முக சுந்தரம், 2013)***

என்பதிலிருந்து நாகம்மாளின் கூடா நட்பினால் சின்ன்ப்பன் இறந்துவிடுவதைக் காணமுடிகிறது. இக்கதையின் அமைப்பு முறையும் கதைகூறும் விதமும் உயிர்ப்பு மிக்கதாக இடம்பெற்றுள்ளதைப் பார்க்க முடிகின்றது. கதைப்போக்கில் கதையில் நிகழும் மாற்றம் ஆளுமை மிக்க நாகம்மாள் தன் திறம் குன்றி கீழ்நிலைப் பண்பு உடையவளாக மாறுவதை அறிய முடிகின்றது. அவள் ஆளுமைத் திறம் சிதைவு அடைகின்றது.

**முடிவுரை**

நாகம்மாள் குறுநாவலில் இடம்பெற்றுள்ள கதைக்கருவானது உண்மை நிகழ்வின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளதாகும். பெண்மைக்கு என்று தனித இயல்பும் குணநலனும்

பெற்றிருந்தாலும் அன்பு காட்டுவதில் சிறந்தவர்களாகப் பெண்கள் விளங்கியுள்ளனர். நாகம்மாள் என்ற பெண் ஆளுமைத்திறன் கொண்டவளாக, கடின உழைப்பாளியாக, சிந்தனை சுதந்திரமிக்கவளாகக் காணப்படுகின்றாள். பொறுப்பு, குடும்பம், சமூகச் சூழல் என்ற அனைத்திலும் இணக்கமான பெண்ணானவள், பின்னர் கூடா நட்பின் காரணமாக திசைமாறிச் செல்கின்றாள். பொறுமை, போர்க்குணம் இரண்டும் நாகம்மாளுக்கு இருந்தாலும் அவளின் நண்பர்களான கெட்டியப்பன் செங்காளி ஆகிய தீயகுணமுடையவர்களுடன் பழகியதால் நட்பு கேடாய் முடிவதைப் பார்க்க முடிகின்றது. நாகம்மாள் என்னும் ஆளுமை மிக்க பெண் கதையின் இறுதியில் தன் ஆளுமை இழந்து சராசரி பெண்ணாக மாற்றம் பெறுவதில் கட்டமைககப்பட்ட ஆளுமை சிதைவு அடைகின்றது.

**மேற்கோள்கள்**


1. *ஆர். ஷண்முக சுந்தரம், (2013), நாகம்மாள், முதற்பதிப்பு, நற்றிணை பதிப்பகம், 243, திருவல்லிக்கேணி மெயின், சென்னை - 600006*
2. *சி. வைஜெயந்தி மாலா, (க.ஆ.), (1984), யாதுமாகி நாவலின் கரு, கதைப்பின்னல், முதற்பதிப்பு, வானம்பாடி, தமிழ்த்துறை வெளியீடு, தனலெட்சுமி சீனிவாசன் மகளிர் கல்லூரி, பெரம்பலூர்*
3. *கு.ப.ரா., (1942), நாகம்மாள் நாவலின் முன்னுரை, முதற்பதிப்பு, நற்றிணை பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை - 05*
4. *தந்தை பெரியார், (1933), பெண் ஏன் அடிமையானள்?, முதற்பதிப்பு, பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிட்., ஈரோடு*
5. *ஆர். ஷண்முக சுந்தரம், (2013) நாகம்மாள், நற்றிணை பதிப்பகம், சென்னை - 600005*
6. *ச. மெய்யப்பன் (ப.ஆ.,), (1997), பாரதியார் கவிதைகள், வானவில் பிரசுரம், 13, இரண்டாவது கிராஸ் தெரு, மேற்கு சி.ஐ.டி. நகர், சென்னை - 600035*
7. *அப்துற்-றஹீம், (2013), வெற்றிக்கு வழி, ஒன்பதாம் பதிப்பு, சுலைமானிய பப்ளிஷர்ஸ், அங்கப்பன் தெரு, சென்னை - 01*
8. *கு.வெ.பா. (உ.ஆ.), (2004), புறநானூறு, முதற்பதிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி.) லிட்., அம்பத்தூர், சென்னை*
9. *ஆச்சார்யா (உ.ஆ.), (2008), திருக்குறள், முதற்பதிப்பு, நர்மதா பதிப்பகம், சென்னை*